# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - இருத்தும்
## தம்மிடம் வந்து தாம் எண்ணியபடியெல்லாம் எம்பெருமான் கலக்க, அந்தக் கலவியை 'மயக்கமோ?' என ஐயமுற்று, உண்மையெனத் தெளிந்து ஆழ்வார் எம்பெருமானது குணங்களைப் பேசுதல்

** இருத்தும் வியந்து என்னைத் * தன் பொன் அடிக் கீழ் என்று *
அருத்தித்து எனைத்தோர் * பல நாள் அழைத்தேற்கு **
பொருத்தம் உடை * வாமனன் தான் புகுந்து * என்தன்
கருத்தை உற வீற்றிருந்தான் * கண்டு கொண்டே 1

இருந்தான் கண்டு கொண்டு * எனது ஏழை நெஞ்சாளும் *
திருந்தாத ஓர் ஐவரைத் * தேய்ந்து அற மன்னி **
பெருந்தாள் களிற்றுக்கு * அருள் செய்த பெருமான் *
தருந்தான் அருள் தான் * இனி யான் அறியேனே 2

அருள் தான் இனி யான் அறியேன் * அவன் என் உள் *
இருள் தான் அற வீற்றிருந்தான் * இது அல்லால் **
பொருள் தான் எனில் * மூ உலகும் பொருள் அல்ல *
மருள் தான் ஈதோ? * மாய மயக்கு மயக்கே 3

மாய மயக்கு மயக்கான் * என்னை வஞ்சித்து *
ஆயன் அமரர்க்கு அரி ஏறு * எனது அம்மான் **
தூய சுடர்ச் சோதி * தனது என்னுள் வைத்தான் *
தேசம் திகழும் * தன் திரு அருள் செய்தே 4

திகழும் தன் திரு அருள் செய்து * உலகத்தார்
புகழும் புகழ் * தான் அது காட்டித் தந்து ** என்னுள்
திகழும் மணிக் குன்றம் ஒன்றே * ஒத்து நின்றான் *
புகழும் புகழ் * மற்று எனக்கும் ஓர் பொருளே? 5

பொருள் மற்று எனக்கும் ஓர் பொருள் தன்னில் * சீர்க்கத்
தருமேல் * பின்னை ஆர்க்கு அவன் * தன்னைக் கொடுக்கும்? **
கரு மாணிக்கக் குன்றத்துத் * தாமரை போல் *
திரு மார்வு கால் கண் கை * செவ்வாய் உந்தியானே 6

செவ்வாய் உந்தி * வெண் பல் சுடர்க் குழை தம்மோடு *
எவ்வாய்ச் சுடரும் * தம்மில் முன்வளாய்க் கொள்ள **
செவ்வாய் முறுவலோடு * எனது உள்ளத்து இருந்த *
அவ்வாய் அன்றி * யான் அறியேன் மற்று அருளே 7

அறியேன் மற்று அருள் * என்னை ஆளும் பிரானார் *
வெறிதே அருள் செய்வர் * செய்வார்கட்கு உகந்து **
சிறியேனுடைச் * சிந்தையுள் மூ உலகும் * தன்
நெறியா வயிற்றில் கொண்டு * நின்றொழிந்தாரே 8

வயிற்றில் கொண்டு * நின்றொழிந்தாரும் யவரும் *
வயிற்றில் கொண்டு * நின்றொரு மூ உலகும் ** தம்
வயிற்றில் கொண்டு * நின்ற வண்ணம் நின்ற மாலை *
வயிற்றில் கொண்டு * மன்ன வைத்தேன் மதியாலே 9

வைத்தேன் மதியால் * எனது உள்ளத்து அகத்தே *
எய்த்தே ஒழிவேன் அல்லேன் * என்றும் எப்போதும் **
மொய்த்தேய் திரை மோது * தண் பாற்கடலுளால் *
பைத்தேய் * சுடர்ப் பாம்பணை நம் பரனையே 10

** சுடர்ப் பாம்பணை நம் பரனைத் * திருமாலை *
அடிச் சேர் வகை * வண்குருகூர்ச் சடகோபன் **
முடிப்பான் சொன்ன ஆயிரத்து * இப்பத்தும் சன்மம்
விட * தேய்ந்தற நோக்கும் * தன் கண்கள் சிவந்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---